# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

# குடியியற்கல்வி

| சுட்டெண் :- .......................................... | தரம் : - 11 | நேரம் :- 3. 00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி - I

❖ **கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி ( X ) இடுக.
- அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

(01) மக்களின் அபிப்பிராயங்களை அல்லது கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் ஆட்சி முறை

(1) மன்னராட்சிமுறை (2) பிரபுத்துவ ஆட்சிமுறை
(3) சனநாயக ஆட்சிமுறை (4) சர்வாதிகார ஆட்சிமுறை

(02) கி.பி 5ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 15ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் ஐரோப்பாவில் நிலவிய அமைப்பு முறை

(1) நிலமானிய சமுதாய அமைப்பு முறை (2) தேசிய அரசு அமைப்புமுறை
(3) குடியாட்சி அமைப்புமுறை (4) நேரடி ஆட்சி அமைப்பு முறை

(03) கி.பி 1688 இல் ஏற்பட்ட புரட்சி

(1) பிரஞ்சுப்புரட்சி (2) ரஷ்யப்புரட்சி
(3) அமெரிக்கப்புரட்சி (4) ஆங்கிலப்புரட்சி

(04) “சனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆட்சிமுறையாகும்” என சனநாயகத்திற்கு வரைவிலக்கணம் கூறியவர்

(1) ஆபிரகாம்லிங்கன் (2) சீலர்
(3) காணர் (4) T.B டெயிலர்

(05) சனநாயக சமூகமொன்றில் ஆட்சி தொடர்பான விவகாரங்களை மேற்கொள்வதற்கு மக்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரம்

(1) இறைமை
(2) வாக்குரிமை
(3) மீயுயர் அதிகாரம்
(4) அரசியலமைப்பு அதிகாரம்

(06) அரசாங்கத்தின் முக்கிய மூன்று கூறுகள்
(1) சனத்தொகை, இறைமை, நீதித்துறை
(2) நீதித்துறை, ஆள்புலப் பிரதேசம், சட்டத்துறை
(3) சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை
(4) சட்டத்துறை, நீதித்துறை, ஆள்புலப்பிரதேசம்

(07) கூட்டாட்சி நடைபெறும் நாட்டில் மத்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பது
(1) மேல்நிலை நீதி மன்றங்கள் (2) நீதவான் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) மாகாண மேல் நீதிமன்றம்

(08) சனாதிபதி அரசாங்க முறையின் நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்துபவர்
(1) பிரதமர் (2) சபாநாயகர்
(3) உயர்நீதிமன்ற நீதிபதி (4) ஜனாதிபதி

(09) மத்திய அரசின் கீழ் அதிகாரங்கள் ஒன்றுகுவிக்கப்பட்ட ஆட்சிமுறை
(1) ஒற்றையாட்சி (2) கூட்டாட்சி
(3) நலன்புரி அரசாட்சி (4) சர்வாதிகாரஆட்சி

(10) இலங்கையில் பிரதேச மட்டத்தில் நிர்வாக அதிகாரத்தைச் செயல்படுத்துபவர்
(1) அமைச்சின் செயலாளர் (2) கிராம சேவையாளர்
(3) பிரதேச செயலாளர் (4) மாவட்ட செயலாளர்

(11) "எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்திருப்பிக் அது ஒற்றையாட்சி முறையாகும்" என ஒற்றையாட்சி அரசுக்கு வரைவிலக்கணம் கூறியவர்
(1) காணர் (2) சீலர் (3) J. லஸ்கி (4) ஹெர்மன்

(12) ஒற்றையாட்சி முறை
(1) பல்லின சமூக அமைப்பு நாடுகளுக்குப் பொருத்தமானது
(2) இரு இன சமூக அமைப்பு நாடுகளுக்குப் பொருத்தமானது
(3) பன்மைக் கலாசார அமைப்பு நாடுகளுக்குப் பொருத்தமானது
(4) ஒரு இன நாடுகளுக்குப் பொருத்தமானது

(13) சுவிற்சர்லாந்திலுள்ள கன்ரன் எனப்படும் மாநில அரசுகளின் எண்ணிக்கை
(1) 12 (2) 24 (3) 26 (4) 30

(14) சமஷ்டி ஆட்சி முறையின் பிரதான பண்பு
(1) அரச அதிகாரம் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே பகிரப்பட்டிருப்பது
(2) நிறைவேற்றுத்துறையும், நீதித்துறையும் முழுநாட்டிற்கும் பொதுவானதாக அமைதல்
(3) அரசியல் அதிகாரம் மத்திய நிறுவனத்தில் குவிந்திருக்கும்
(4) மத்திய அரசு, மாநில அரசு என்னும் இரு வேறு அதிகார நிறுவனங்கள் இன்மை

(15) ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி செனட் சபையிடம் அனுமதி பெற்று நடைமுறைப்படுத்தும் அதிகாரங்கள்
(1) கல்வி, வர்த்தகம்

(2) வர்த்தகம், வெளியுறவுக்கொள்கை
(3) போர்ப்பிரகடனம், வெளிநாட்டு உயர் அதிகாரிகள் நியமனம்
(4) கல்வி, போர்ப்பிரகடனம்

(16) ஐக்கிய அமெரிக்காவில், அரசியல் யாப்பிற்கு விளக்கமளிக்கும் அதிகாரமுடையது
(1) மாவட்ட நீதிமன்றம் (2) சமஷ்டி நீதிமன்றம்
(3) செனட்சபை (4) பாராளுமன்றம்

(17) இலங்கையில் அநுராதபுர காலத்திலிருந்தே அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. அதன்படி பண்டுகாபய மன்னன் கிராம நிர்வாகத்திற்காக நியமித்திருந்த அதிகாரிகள்
(1) கம்பாரா, காமினி (2) பருமக, குர்ஹபதி
(3) காமினி, கஹபதி (4) கஹபதி, குர்ஹபதி

(18) இலங்கையில் கி.பி 1865, 1866 ஆம் ஆண்டுகளில் பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட இரு மாநகரசபைகள் முறையே
(1) யாழ்ப்பாணம், கொழும்பு (2) கண்டி, யாழ்ப்பாணம்
(3) கொழும்பு, கண்டி (4) காலி, கண்டி

(19) இலங்கையில் கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள மாகாணசபை
(1) ஊவா மாகாணசபை (2) வடமாகாணசபை
(3) சப்ரகமுவ மாகாணசபை (4) வடமத்தியமாகாணசபை

(20) இலங்கையில் மத்திய அரசு, மாகாணசபை என்பவற்றின் இணைப்பாளராகச் செயற்படுபவர்
(1) முதலமைச்சர் (2) ஜனாதிபதி (3) பிரதமர் (4) ஆளுநர்

(21) 1978 அரசியில் யாப்பின் 13 ஆம் சீர்திருத்தத்தின்படி மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்ட நிரல்
(1) நிரல் II (2) நிரல் I (3) நிரல் III (4) நிரல் I, II

(22) இலங்கையில் மாகாணசபை அமைக்கப்படக் காரணமாக இருந்த யாப்புச் சீர்திருத்தம்
(1) 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 13 ஆம் சீர்திருத்தம்
(2) 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 18 ஆம் சீர்திருத்தம்
(3) 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 13 ஆம் சீர்திருத்தம்
(4) 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 154ஆம் சீர்திருத்தம்

(23) இலங்கையில் மாகாணசபை ஒன்றின் பதவிக்காலம்
(1) 3 வருடங்கள்
(2) 5 வருடங்கள்
(3) 6 வருடங்கள்
(4) 8 வருடங்கள்

(24) இலங்கையில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களை உள்ளடக்கிய தேர்தல் மாவட்டம்
(1) வன்னி
(2) யாழ்ப்பாணம்

(3) கிளிநொச்சி

(4) வவுனியா

(25) A) - உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருத்தல்

(B) - வருமானம் சமமற்ற வகையில் பங்கிடப்படல்

(C) - பொருட்களின் விலையைத் தீர்மானிக்கும் போது அரசு தலையீடு இருத்தல்

(D) - மத்திய திட்டமிடல் சபையின் மூலம் பொருளாதாரம் நிர்வகிக்கப்படுதல்

(E) - இலாபத்தினை நோக்கமாகக் கொண்டு செயற்படுதல்

மேலே தரப்பட்டுள்ள பொருளாதார முறைமையின் பண்புகளில் முதலாளித்துவப் பொருளாதார முறையின் பண்புகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

(1) A யும் E யும் (2) B யும் E யும்

(3) C யும் D யும் (4) A யும் D யும்

(26) இலங்கையில் பன்மைப்பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய ஆக்கிரமிப்புத் தொடர்பான காரணி

(1) விஜயனும் தோழர்களும் வருகை தந்தமை

(2) இந்தியர் வர்த்தக நோக்கத்திற்காக வருகை தந்தமை

(3) கலிங்கமாகனின் ஆக்கிரமிப்பு

(4) மகிந்ததேரரின் வருகை

(27) இலங்கையில் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி 74.9% சதவீதமாகக் காணப்படும் இனத்தவர்கள்

(1) இலங்கைத் தமிழர் (2) இந்தியத்தமிழர்

(3) இலங்கை முஸ்லீம்கள் (4) சிங்களவர்

(28) ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்யும் போது அதன் மையமாக இருக்கின்ற நுகர்வோர்

(1) உயர் வருமானம் பெறுவோர் (2) நடுத்தர வருமானம் பெறுவோர்

(3) குறைந்த வருமானம் பெறுவோர் (4) வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்போர்

(29) உற்பத்தியிலீடுபடுத்தப்படும் முதலீடுகளுக்கு வழங்கும் கொடுப்பனவு

(1) வாடகை (2) இலாபம் (3) வட்டி (4) கூலி

(30) சொத்துக்களினதும், வளங்களினதும் உரிமையின் பெரும்பகுதியை தனியார் துறை கொண்டிருக்கும் பொருளாதார முறைமை

(1) கலப்புப்பொருளாதார முறைமை

(2) முதலாளித்துவப் பொருளாதார முறைமை

(3) சமதர்ம பொருளாதார முறைமை

(4) சந்தைப் பொருளாதார முறைமை

(31) மனிதன் அன்றாட தேவைகளுக்குப் பயன்படுத்தும் பொருட்கள்

(1) மூலதனப் பொருட்கள்

(2) இடைநிலைப் பொருட்கள்

(3) நுகர்வுப் பொருட்கள்

(4) மூலப் பொருட்கள்

(32) பொருட்களுக்குப் பதிலாக பொருட்களைப் பரிமாறிக்கொள்ளும் முறை

(1) வர்த்தகம்

(2) ஏற்றுமதி - இறக்குமதி பொருளாதார முறைமை
(3) சுயதேவைப் பொருளாதார முறைமை
(4) பண்டமாற்று முறை

(33) கி.பி 1948 ஆம் ஆண்டில் இலங்கைக்குச் சுதந்திரத்தினை வழங்கிய நாடு
(1) போர்த்துக்கல் (2) ஒல்லாந்து (3) பிரான்ஸ் (4) பிரித்தானியா

(34) 1977 ஆம் ஆண்டின் பின் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்ட பொருளாதாரக் கொள்கை
(1) மூடிய பொருளாதாரக் கொள்கை
(2) மூடிய, திறந்த பொருளாதாரக் கொள்கை
(3) திறந்த பொருளாதாரக் கொள்கை
(4) கலப்பு பொருளாதாரக் கொள்கை

(35) இந்தியா, மியன்மார், தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளால் உருவாக்கப்பட்ட அமைப்பு
(1) SAPTA (2) NAFTA (3) EU (4) BIMSTEC

(36) சந்தைப் பொருளாதாரம் நிலவுகின்ற நாடுகளில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சந்தை இயல்புகளை அதிகளவில் கொண்டிருக்கும் நாடுகள்
(1) சீனா, ரஷ்யா (2) தாய்வான், ரஷ்யா
(3) போலந்து, சீனா (4) தென்கொரியா, கொங்கொங்

(37) இலங்கையில் வறிய மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக நடைமுறைப் படுத்தப்பட்ட வேலைத்திட்டம்
(1) சமுர்த்தி (2) நனசல
(3) விதாதா (4) மகநெகும

(38) 2012 ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்திக் குறிகாட்டியின்படி இலங்கையின் மனிதவள அபிவிருத்திச்சுட்டி
(1) 102 (2) 91
(3) 92 (4) 90

(39) ஐரோப்பிய ஒன்றியம் தனது வலய நாடுகள் மத்தியில் அறிமுகப்படுத்திய பண அலகு
(1) யூரோ (2) பவுண்ஸ்
(3) யுரேக் (4) ஜென்

(40) தேசிய மட்டத்தில் அல்லது விரிவான வகையில் நிலவும் மோதல்
(1) நுண்மையான மோதல்
(2) தனிநபர் மோதல்
(3) வெளிப்படையான மோதல்
(4) சர்வதேச மோதல்

The National e-learning Portal for The General Education

## பகுதி - II

- ❖ **முதலாம் வினா கட்டாயமானது.**
- ❖ **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**(1)** (i) பண்டைய காலத்தில் உலகில் நிலவிய இரண்டு ஆட்சி முறைகளைக் குறிப்பிடுக.

(ii) மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காகப் பின்பற்றப்படும் தேர்தல் முறைகள் இரண்டு தருக.

(iii) சுதந்திரம், சமத்துவம், உரிமைகள் தொடர்பாக வரைவிலக்கணங்களை முன் வைத்த இரு நபர்களின் பெயர்களைத் தருக.

(iv) இறைமையில் உள்ளடங்கும் இரு விடயங்களைத் தருக.

(v) மாகாணத்தின் பிரதானிகள் தொகையைத் தீர்மானிப்பதில் கவனத்தில் கொள்ளப்படும் இரண்டு விடங்களைத் தருக.

(vi) சுவிஸ்சர்லாந்தில் நிறைவேற்றுத்துறைக்கு வழங்கப்படும் பெயரையும் அதன் அங்கத்தவர் எண்ணிக்கையையும் தருக.

(vii) நவீன உலகில் உற்பத்தி நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக காணப்படும் ஒழுங்கமைப்புக்கள் இரண்டு தருக.

(viii) உலகநாடுகளில் நிலவும் பொருளாதார முறைகள் இரண்டு தருக.

(ix) உலகமயமாதலுக்கு ஆதரவாகச் செயற்படுகின்ற நிறுவனங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

(x) மோதலின் பிரதான பிரிவுகள் இரண்டினையும் தருக.

*(10 x 2 = 20 புள்ளிகள்)*

**(2)** (i) சனநாயகம் தொடர்பான வரைவிலக்கணங்களை முன்வைத்த இரு அறிஞர்களின் பெயர்களைத் தருக. *(2 புள்ளி)*

(ii) தற்கால அரசுகளில் காணப்படும் கட்சிகளின் வகைப்படுத்தல்கள் மூன்று தருக. *(3 புள்ளி)*

(iii) தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் நன்மைகள் மூன்று குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. *(5 புள்ளி)*

**(3)** (i) தேசிய அரசுகள் பலமடைவதற்குக் காரணமான சிந்தனையாளர்கள் இருவரின் பெயரைத் தருக.

*(2 புள்ளி)*

(ii) தேசிய அரசுகள் ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற ஐரோப்பிய நாடுகள் மூன்று தருக. ...........

*(3 புள்ளி)*

(iii) தேசிய அரசுகளின் பிரதான பண்புகள் மூன்று குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளி)*

**(4)** (i) அரசியல் யாப்பின் மூலம் மத்திய, பிரதேச நிறுவனங்களுக்கு வழங்கப்படுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அரசின் இரு வகைகளையும் தருக.

*(2 புள்ளி)*

(ii) அரசாங்கம் ஒன்றின் முக்கிய கூறுகள் மூன்றினையும் தருக.

*(3 புள்ளி)*

(iii) அரசாங்கத்தின் பணிகள் மூன்று குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளி)*

**(5)** (i) இலங்கையில் தேசிய மட்டத்திலிருந்து பிராந்திய மட்டம் வரையில் நிர்வாக அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டுள்ள பிராந்திய நிர்வாக அலகுகள் மூன்று குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளி)*

(ii) சுவிஸ்சர்லாந்தின் சமஷ்டி முறையில் மத்திய அரசிடமுள்ள அதிகாரங்கள் இரண்டு தருக.

*(2 புள்ளி)*

(iii) சுவிட்சர்லாந்து நாட்டின் சமஸ்டிமுறையின் அரசியல் கட்டமைப்பின் பண்புகள் மூன்று தருக.

*(3 புள்ளி)*

**(6)** (i) பொருளாதார முறைமை ஒன்றில் இடம்பெறுகின்ற செயற்பாடுகள் இரண்டு குறிப்பிடுக.

*(2 புள்ளி)*

(ii) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் மூன்றையும் தருக.

*(3 புள்ளி)*

(iii) முதலாளித்துவப் பொருளாதாரமுறை ஒன்றின் அடிப்படைப் பண்புகள் மூன்று குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. *(5 புள்ளி)*

**(7)** (i) மோதல் ஏற்படும் தரப்புக்கள் இரண்டு தருக.

*(2 புள்ளி)*

(ii) மோதலைத் தீர்க்கும் நுட்பமுறைகளில் ஒன்றான கலந்துரையாடலின் பண்புகள் மூன்று தருக. *(3 புள்ளி)*

(iii) கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் மூன்று குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

*(5 புள்ளி)*

The National e-learning Portal for General Education